පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය - 492

ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, හම්බන්තොට

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492

நிறுவனத்தின் பெயர்: மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக, நிலையான கட்டளை 119 (4) இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சரால் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த பாராளுமன்றத்திற்கான சமர்ப்பிப்பு

Parliamentary Series No – 492

Name of the Institution: District Secretariat Office - Hambantota

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order No.119 (4)

**இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.**

பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் – 492

மாவட்ட செயலகம் – ஹம்பாந்தோட்டை

முதலாம் பகுதி : 82.00

| | அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படவில்லை. | ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்க முடியுமானவாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>பெரும்பாலான கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலத்திற்குள் பதில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| 02 | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்காக ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கை இடப்பட்டுள்ளது. | ஏற்புடைய பிரதேச செயலகங்கள் தொடர்பான கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்க முடியுமானவாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>பெரும்பாலான கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் உரிய காலத்திற்குள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் துரித பதில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| 03 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் குறைந்த பட்சம் 4 கூட்டத் தொடர்களை நடாத்தவில்லை. | 2023 ஆம் ஆண்டு 03 மாவட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பிரதேச கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கள் அனைத்தும் உரியவாறு நடாத்தப்பட்டன.<br>2024/2025 ஆண்டுகளுக்காக உரியவாறு முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டன. |
| | **அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய முன்னேற்றம்** |
| 04 | அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை நிறம் தீட்டப்படவில்லை. | அரச இலட்சினைகளை நிறம் தீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br>ஒதுக்கு வாகனங்கள் அனைத்திலும் அரச இலட்சினைகள் நிறம் தீட்டி முடிக்கப்பட்டுள்ளது. |
| 05 | வாகனம் ஒன்று சேதமடைந்து 08 மாத காலத்திற்குள் அகற்றப்படவில்லை. | சேதமடைந்த வாகனங்களின் பதிவு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள் இல்லாமை காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. ஏற்புடைய ஆரம்ப பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சேதமடைந்த வாகனங்கள் தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் மதிப்பீட்டுக் குழுக்களை நியமித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| 06 | ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் முதல் இருந்து வரும் நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.<br>நிலுவைக் கடன் மீதி தொடர்பில் இரண்டு நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 06 நபர்களிடம் கடன் நிலுவைகள் அறவிடப்பட்டு வருகிறது |
| 07 | நி.பி.371 பிரகாரம் வெளியிடப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால முற்பணப் பணிகள் நிறைவடைந்து 10 தினங்களுக்குள் தீர்க்கப்படவில்லை. | குறித்த பணிக்கான இடைக்கால முற்பணங்களைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு துரிதமாக கொடுப்பனவு மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>குறித்த பணிக்கான இடைக்கால முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**<u>இரண்டாம் பகுதி:80.00</u>**

| | | |
|---|---|---|
| 01 | மாவட்ட வீட்டுக் குழுக்கள் மாதாந்தம் கூட்டப்படவில்லை. | தற்போதைய அரச வீடுகளை பழுதுபார்ப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளின் பற்றாக்குறை மற்றும் வீடுகளுக்கான கோரிக்கை குறைவடைதல் காரணமாக தேவைக்கு ஏற்ப ஆண்டின் போது வீட்டுக் குழுக்கள் நடாத்தப்பட்டன. உத்தியோகபூர்வ வீடுகளுக்கான கோரிக்கை பற்றிக் கருத்திற் கொண்டு தேவைக்கு ஏற்றவாறு வீட்டுக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன |
| | **<u>அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்</u>** | **<u>கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய முன்னேற்றம்</u>** |
| 02 | மாவட்ட உரம் ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் கூட்டப்படவில்லை. | ஆண்டில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக தேவைக்கு ஏற்றவாறு உரக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>உர நிவாரண உதவி முறை செயற்படாத காரணமாக உரக் குழுக்கள் பருவகாலத்தின் தேவைக்கு ஏற்ப நடாத்தப்படுகிறது |
| 03 | மாவட்ட விலை நிர்ணயக் குழு மாதாந்தம் கூட்டப்படவில்லை. | குறிப்பிடத்தக்க விலை மாற்றங்கள் இல்லாததால், மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டம் அரையாண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்டது. குறிப்பிடத்தக்க விலை மாற்றங்கள் ஏற்பட்டால், தேவைக்கேற்ப மாவட்ட விலைக் குழு கூட்டங்களை நடத்த நான் ஏற்பாடு செய்வேன். |
| 04 | கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்படாதது தொடர்பான புகார்களை ஆவணப்படுத்தவோ, அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கவோ எந்தப் பதிவேடுகளும் பராமரிக்கப்படவில்லை. | இந்த ஆவணம் 2022 ஆம் ஆண்டு முதல் DSH/ADM/17/REG/02 என்ற எண்ணின் கீழ் RTI-11 வடிவத்தில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. |
| 05 | நிர்வாகம் மற்றும் மேலாண்மை அமைச்சகத்தின் 06.02.2008 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 05/2008, 24.01.2018 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 05/2018(1) ஆல் திருத்தப்பட்டபடி, குடிமகன்/சேவை பெறுநர் கட்டளைச் சட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டு முதல் குடிமகன்/சேவைப் பெறுநர் பிரகடனம் தயாரிக்கப்பட்டுப் பராமரிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 06 | நிறுவனத்தின் பிரசைகள்/ சேவை பெறுநர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கான முறையியல் தயாரிக்கப்படவில்லை. | பிரசைகள் சாசனத்தை தயாரிக்குமாறு அனைத்து அலுவலகங்களுக்கும் அறிவித்து தற்போது செய்படுத்தப்படுகிறது. மதிப்பீட்டுப் பணிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.<br>சில அலுவலகங்கள் பிரசைகள் / சேவை பெறுநர் சாசனத்தை இற்றைபடுத்தி உள்ளது. மதிப்பீடுகளை மேற்கொண்டு தேவையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | **அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய முன்னேற்றம்** |
| 07 | நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கீழ் நிலையில்/ பொருத்தமற்ற நிலையில்/பாதக நிலையில் காணப்பட்டது. | 2022 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கீழ் நிலை அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது.<br>எதிர் காலத்தில் தெளிவான அபிப்பிராயம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| 08 | மாவட்ட மற்றும் பிரதேச போதைப் பொருள் ஒழிப்பு குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு தடவை கூட்டப்படவில்லை. | போதைப் பொருள் ஒழிப்பு உத்தியோகத்தர்கள் மூலம் மாவட்ட போதைப் பொருள் ஒழிப்புக் குழுக்களை காலாண்டு ரீதியில் மற்றும் பிரதேச குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br>தற்போது பிரதேச குழுக்கள் நடாத்தப்படுகிறது. மாவட்ட குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| 09 | திட்டமிடப்பட்ட பயிற்சிச் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% சதவீதத்தை விடவும் குறைவாக காணப்பட்டது | மாவட்ட பயிற்சி அலகிற்கு அறிவித்து பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.<br>பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது |
| 10 | கணக்காய்வாளர் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.<br>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சாதனை மட்டத்தில் உள்ளது. |
| 11 | அனைத்து உத்தியோகத்தர்களாலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024/2025 ஆம் ஆண்டுகளுக்கு அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரத்தை சமர்ப்பித்துள்ளார்கள். |
| 12 | மாவட்ட சுற்றாடல் குழு குறைந்த பட்சம் மாதத்திற்கு 02 தடவைகள் கூட்டப்படவில்லை. | சுற்றாடல் உத்தியோகத்தர்கள் ஊடாக சுற்றாடல் குழுக்களை நடாத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.<br>சுற்றாடல் குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

.............................................

பிமல் இந்திரஜித் த சில்வா
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
ஹம்பந்தோட்டை நிர்வாக மாவட்டம்

Bimal Indrajith De Silva
District Secretary / Government Agent
Hambantota

.............................................

ஜானக அமரரத்ன,
பிரதான கணக்காளர்,
மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை

Janaka Amararathna
Chief Accountant
District Secretariat
Hambantota.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.